## 02: மஹாசம்மதா சந்ததியினர்

மஹாசம்மதாவின் இனத்தை சார்ந்தவர் புனித முனிவர். முன்னொரு காலத்தில் மஹாசமன்தா (*Mahasammata*) என்ற மன்னன் வாழ்ந்து வந்தார். அவரைத் தொடர்ந்து ஆட்சிக்கு வந்தவர்கள் ரோஜா - வரோஜா *(Roja and Vararoja)* , கல்யாணா-வரகல்யாணா (*Kalyanakas*), உபாஸதா-மண்டோசா (*Uposatha and Mandhata*), கரகா-உபகரகா (*Caraka and Upacara*), சேடியா-முகாலா (*Cetiya and Mucala*), மகாமுகாலா (*Mahamucala*), முகாலிண்டா- சாஹரா (*Mucalinda and Sagara*), சாஹரதேவா (*Sagaradeva*), பரதா-அங்கீரஸா (*Bharata and Angirasa*), ருசி-சுருசி (*Ruci and also Suruci,*), படாபா-மஹாபடாபா (*Patapa and Mahapatapa*) , இரு பனடர்கள் (*Panadas*), சுதாசனா-நேரு (*Sudassana and Neru*), பனடா-மஹாபனடா (*Panada and Mahapanada),* படபா-மஹாபடபா *(Patapa and Mahapatapa )* , சுடாஸனா-மஹாசுடாசனா *(Sudassana and Mahasudassan)*, மற்றும் நிரு-மஹாநிரு (*Neru and Mahaneru*) போன்ற இருவரிருவர், மற்றும் அகிமா (*Accima*). போன்றவர்கள். அதன் பின் அவர்களுடைய இருபத்தி எட்டு மகன்களும், பேரன்களும் குசாவடி, இராஜகஹா மற்றும் மிதிலையை (*Kusavati, Rajagaha, and Mithila*) கணக்கிட முடியாத காலத்திற்கு ஆண்டனர். அவர்களுக்கு பிறகு ஆண்டவர்கள் பகுலா முதல் அரிம்தானா வரையிலான நூறு மன்னர்கள், பின்னர் ஐம்பத்தி ஆறு, அறுபது, எண்பத்தி நான்காயிரம், முப்பத்தி ஆறு, முப்பத்தி இரண்டு, இருபத்தி எட்டு, மீண்டும் இருபத்தி எட்டு, பதினெட்டு, பதினேழு, பதினைந்து, பதினான்கு, ஒன்பது, ஏழு, பன்னிரண்டு, இருபத்தி ஐந்து, மீண்டும் இருபத்தி ஐந்து,

பன்னிரண்டு, மீண்டும் பன்னிரண்டு, ஒன்பது மற்றும் காலராஜநாகா தலைமையில் (*Kalarajanaka*) எட்டாயிரத்து நானூறு, ஒக்காலா வரை (*Okkaka*) பதினாறு என மஹாசம்மதாவின் சந்ததியினர் ஆண்டு வந்தனர். ஓக்கக்காவின் (*Okkaka*) மூத்தப் பிள்ளைதான் ஒக்கமுகா(*Okkamuha* ) ஆவார். நிபுனா, கன்டிமா, கன்டமுகா, மற்றும் சிவ சம்ஜயா போன்றவர்களும் (*Nipuna, Candima, Candamukha and Sivisamjaya)* பேரரசனான வசன்தராவும் *(Vessantara)* , ஜாலி ( *Jali),* சிஹவாஹனா மற்றும் சிஹஸ்ஸரா ( *Sihavahana and Sihassara)* போன்றவர்களும் அவருடைய மகன்களும், பேரன்களும் ஆவர். சிஹஸ்ஸராவுக்கு எண்பத்தி இரண்டாயிரம் மகன்களும், பேரன்களும் இருந்தனர். ஜெயசேனா (*Jayasena*) என்பவர் அவருடைய கடைசி மகன். அவர்கள் புத்தர் பிறந்த இடமான கபிலவட்டு (*Kapilavatthu*) என்ற இடத்தை ஆண்ட சக்யா பழங்குடி இன வம்ச மன்னர்கள். தற்பொழுது இந்த இடம் நேபாளத்தில் உள்ளது என நம்பப்படுகின்றது. ஜேயசேனாவிற்கு சிஹஹானு (*Sihahanu*) என்ற மகனும், யசோதா (*Yasodhara*) என்ற மகளும் இருந்தனர். தேவதாஹச்சா (*Devadahasakka*) என்ற இடத்தில் ஆட்சியில் இருந்தவர் தேவதாஹா (*Devadaha*) என்பவர். அவருக்கு அஞ்ஞனா (*Anjana*) மற்றும் காச்சனா (*Kaccana*) என்ற இரு வாரிசுகள் இருந்தனர். சிஹஹானுவின் முதல் மனைவியே காச்சனா. யசோதாவோ சக்க அஞ்ஞனாவின் (*Sakka Anjana*) இராணியாவார். அஞ்ஞனாவிற்கு மாயா, பஜாபதி (*Maya and Pajapati*) என்ற இரு மகள்களும் தண்டபாணி மற்றும் சக்கிய சுப்பபுத்தா (*Dandapani and Sakiya Suppabuddha.)* என்ற இரு மகன்களும் இருந்தனர். சிஹஹானுவிற்கு சுத்தோானா, தோடோதனா, சக்கா, சுக்கா மற்றும் அமிதோதனா

(*Suddhodana, Dhotodana, Sakka, Sukka*[1], *and Amitodana*) என்ற ஐந்து மகன்களும், அமிதா, பமிதா (*Amita and Pamita*) என்ற இரு மகள்களும் இருந்தனர்.

அவர்களைத் தொடர்ந்து ஆண்ட சந்ததியினரிர் சிட்டி (*Sitthi*) என்பவர் முடிய அட்டிபுராவை (*Aritthapura*) ஆண்ட பதினெட்டு மன்னர்கள், பிரும்மதேவா (*Brahmadeva.*) என்பவர் முடிய இன்டபட்டாவை (*Indapatta*) ஆண்ட பதினேழு மன்னர்கள், பாலதத்தா (*Baladatta*) என்பவர் முடிய எக்கக்கக்கு (*Ekacakkhu*) என்ற இடத்தை ஆண்ட பதினைந்து மன்னர்கள், பாதத்ததேவா (*Bhaddadeva*) என்பவர் முடிய கோசம்பியை (*Kosambi*) ஆண்ட பதினான்கு மன்னர்கள், நாரதேவா (*Naradeva*) என்பவர் முடிய கன்னக்கோச்சாவை (*Kannagoccha*) ஆண்ட ஒன்பது மன்னர்கள், மஹிந்தா (*Mahinda*) என்பவர் முடிய இரோஜனானகராவை (*Rojananagara*) ஆண்ட ஏழு மன்னர்கள், நாகதேவா (*Nagadeva*) என்பவர் முடிய கம்பாவை (*Campa*) ஆண்ட பன்னிரண்டு மன்னர்கள், புத்ததத்தா (*Buddhadatta*) என்பவர் முடிய மிதிலையை (*Mithila*) ஆண்ட இருபத்தி ஐந்து மன்னர்கள், தீபம்கரா (*Dipamkara*) என்பவர் முடிய இராஜகாஹாவை (*Rajagaha*) ஆண்ட இருபத்தி ஐந்து மன்னர்கள், தாலிஸ்ஸாரா (*Talissara*) என்பவர் முடிய தக்கசீலாவை (*Takkasila*) ஆண்ட பன்னிரண்டு மன்னர்கள், புரிந்தா (*Purinda*) என்பவர் முடிய குசினாராவை (*Kusinara*) ஆண்ட பன்னிரண்டு மன்னர்கள், சஹாரதேவா (*Sagaradeva*) என்பவர் முடிய மாலித்தியாவை (*Malitthiya*) ஆண்ட ஒன்பது மன்னர்கள் என ஒரு நீண்ட பட்டியலே உண்டு.

சாகரதேவாவின் மகன் மக்காதேவா. மிதிலையை ஆண்ட அவருடைய பரம்பரையினர் மொத்தம் 84000 பேர்கள்.

CLICK HERE TO VIEW ENGLISH VERSION

அவர்களில் கடைசி மன்னன் கலராஜனாகாவின் தந்தை நிமியா என்பவர். பாரணாசியை ஆண்ட இளவரசர்கள் சிலரில் சாமம்குரா , அசோகா என்பவர் இருந்தனர். அவரைத் தொடர்ந்து 84000 இளவரசர்கள் பாரணாசியை ஆண்டனர். அவர்களில் கடைசியானவர் விஜயா. விஜயாவைத் தொடர்ந்து ஆண்டவர்கள் விஜிதசேனா, தம்மசேனா, நாகசேனா, சமதா, திகம்பஸி, ரேனு, குசா, மஹாகுசா, நவரதா, தசரதா, சிட்டதாஸி, அத்ததாஸி, சுஜாதா, ஒக்கக்கா போன்றவர்கள்.

சக்கா சப்புத்தாவின் மனைவி அமிதாவிற்கு பத்தகாக்கன்னா தேவதத்தா என்ற இரண்டு புதல்வர்கள இருந்தனர். அவர்களில் ஒருவர்தான் நம்முடைய புனித தெய்வமான புத்தர். சுத்தோதானாற்கு மாயா, பஜாபதி எனற இரு மனைவிகள் உண்டு.

அப்படிப்பட்ட மஹாசமன்தாவின் சந்ததியில் வந்தவரே மனிதப் பிறவியில் பிறவி எடுத்த, தேவர்களுக்கெல்லாம் தேவரான நம்முடைய புனிதப் புதல்வர் ஆவர். போதிசத்தா எனும் சித்தத்தாவின் மனைவி பத்தகாக்கன்னா என்பவர். அவர்களின் புதல்வர் ரஹுலா என்பவர்.

பிம்பிசாரா(*Bimbisara*) என்பவரும் சித்தத்தாவும் (*Siddhattha*) நண்பர்கள். அவர்களைப் போலவே அவர்களுடைய தந்தையினரும் ஒருவருக்கொருவர் நண்பர்களாக இருந்தவர்கள். பிம்பிசாராவை விட போதிசத்தா (*Bodhisatta*) ஐந்து வயது மூத்தவர். அவருக்கு இருபத்தி ஒன்பது வயதான பொழுது வீட்டை விட்டு வெளியேறினார். அவர் ஆறு வருடங்கள் கடுமையாக தன்னை வருத்திக் கொண்டு ஞானம் அடைந்ததும் தமது முப்பத்தி ஐந்தாவது வயதில் பிம்பிசாராவைக் காண

வந்தார். பிம்பிசாராவுக்கு முடி சூட்டப்பட்ட பொழுது அவருடைய வயது பதினைந்து. பதினாறு வருடங்கள் அவர் தம் கொள்கைகளைக் கடை பிடித்து ஆட்சி செய்தார். அதற்குப் பின்னரே அவர் புத்தரை சந்தித்தார். அவருடைய ஆட்சி 250 வருடங்கள் நடந்தாலும் அதில் தாதகாடாவின் வழியில் 37 வருடங்களே ஆட்சி செய்தார்.

பீம்பிசாராவின் முட்டாள் மகனும், கொலைகாரனுமான அஜடசட்டு (*Ajatasattu*) என்பவர் அவருடைய தந்தையைக் கொலை செய்து விட்டு 24 வருடங்கள் ஆட்சி செய்தார். இந்த வாழ்வு நிலையானது அல்ல, நிச்சயம் அழியக் கூடியது என்பதை நன்கு உணர்ந்திருந்த தாடகாதா அவருடைய வாழ்வு முடியும் முன் புகழின் உச்சிக்கே சென்று இருந்தார். இப்படி நிச்சயம் அற்ற வாழ்க்கை நமக்கும் உண்டு என்ற அச்சம் இன்றி வாழாவிடில் துன்பமே மிஞ்சும்.

இப்படியாக புனிதரின் பக்தி மார்கத்தில் இணைந்த புத்த பக்தர்களின் மனதில் பேரானந்தம் பொங்கிட வழி வகுத்த இரண்டாம் பாகமான ‘மஹாசம்மதாவின் சந்ததியினர்’ முடிவுற்றது.